செய்தி வெளியீடு எண்:95 நாள்:03.02.2008

# செய்தி வெளியீடு

இன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களை எம்.ஆர்.எப். தொழிற்சாலையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான திரு. கே.எம். மேம்மன் சந்தித்தார். இச்சந்திப்பின்போது மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் உடனிருந்தார். எம்.ஆர்.எப். தொழிற்சாலையை நாளை முதல் திறந்து நடத்துகிறோம் என்று அதன் நிர்வாகிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் உறுதி அளித்தார்கள். மேலும், தொழிலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக மின்துறை அமைச்சர், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மற்றும் அரசு உயரதிகாரிகள் ஆகியோர் எம்.ஆர்.எப். தொழிற்சாலையின் நிர்வாகத்தோடும், தொழிற்சங்கத்தினரோடும் கலந்துபேசித் தீர்வு காண்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.